[19th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி எடுத்துக்கொள்ளப்படுகிற ஆஸ்பத்திரிகளிலே அதிக வசதிதான் ஏற்படும். இப்பொழுது தாலூகா தலைநகரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிகளைத்தான் முதலில் எடுத்துக் கொள்கிறோம்.

Political prisoners

* 336 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of political prisoners (district-war) imprisoned in this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of Political prisoners in this State is as follows : —

Coimbatore	3
Madurai	11
Ramanathapuram	3
Salem	19
Tanjore	36
Tiruchirappalli	539
Tirunelveli	9

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே, எட்டு, ஒன்பது வருஷங்களுக்குமேல் ஜெயிலில் இருந்து வருகிறார்களே அவர்களை விடுதலை செய்யாவிட்டாலும், தண்டனைக் காலத்தைக் குறைக்கவாவது அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " விடுதலை செய்யாவிட்டாலும் தண்டனைக் காலத்தையாவது குறைக்கக்கூடாதா " என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதிலிருந்து அவர் என்ன வேண்டுகிறார் என்று தெரியவில்லை. இவர்கள் விஷயம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு, முடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, அரசியல் கைதிகள் என்ற முறையில், அவர்களுக்கு விசேஷ வசதிகள் ஏதேனும் வழங்கப்படுகின்றனவா ? அவ்வாறு இல்லையென்றால், விசேஷ வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவரவர்களுடைய முன் வாழ்க்கை முறைப்படி வகுப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தனியாக அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சில வசதிகளும் இருக்கின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : ஆந்திர ராஜ்யத்திலே, ஜன்மதண்டனை அடைந்த கைதிகள் உட்பட, எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால், நமது ராஜ்யத்திலே அது போன்ற விடுதலை செய்யாமலிருப்பதற்குக் காரணம் அரசியல் குரோதமா ? அல்லது ஏதேனும் காரணங்கள் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் மற்ற அரசாங்கங்களைப் பார்த்து பாடம் கற்றுக்கொள்வது இல்லை.

SRI N. K. PALANISAMI : கனம் மந்திரி அவர்கள், " அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருவதாக " சொல்கிறார்கள். அப்போதைக் கப்போது கவனிக்கப்பட்டு யாராவது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களா ?

19th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு சில அரசியல் கைதிகள், நீண்டகால தண்டனை பெற்றவர்கள்கூட, விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

New Elementary Schools

* 337 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any Government Order which bans the opening of any new elementary schools by private management;

(*b*) if so, the reasons for such a ban; and

(*c*) when the Government propose to lift the ban?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*). The Recommendations of the Legislature Committee on Education contemplate and involve (1) fixing a higher pupil teacher ratio, (2) abolition of school fees in standards I to V, (3) abolition of compensation grant payable towards fee concessions in these classes. The abolition of maintenance grant has also been recently recommended by the Local Finance Sub-Committee of the Legislature Committee on Local Administration.

2. The Legislature Committee on Education also recommended examination of the questions of reformation of management of elementary schools and revision of the present system of grants-in-aid payable to them. An *Ad hoc* Committee is at present examining these questions. Pending the issue of definite orders on these matters, it may not be desirable for private managements to open new schools and thereby subject themselves to the uncertainity regarding grants, etc., which may be decided upon.

3. Further, Government have accepted a Scheme of Government of India, under which they are committed to open elementary schools under public management under the Unemployment Relief Scheme. Permission, if any, granted to private managements will in most cases, conflict with the above scheme.

4. In the above circumstances, a " go-slow " policy is being adopted in respect of opening new schools under private management. Permission is even now being granted, if the Director of Public Instruction considers that it is absolutely necessary in any particular case. It is likely that definite orders, clarifying the position of private elementary schools, will be issued so as to come into force during 1959–60.

SRI K. VINAYAKAM : Sir, has the sub-committee appointed by the Legislature Committee on Education submitted its proposals? Will the Government take decisions quickly so that they may adumbrate their clear policy by the beginning of the next academic year about the opening of these schools by private managements?